# IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,

## KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL

## C.C. No. 22/2025

## Deposition of P.W. 2

| | | |
|---|---|---|
| **Name** | : | திரு.கலையரசன் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |
| **Dated** | : | **11.06.2026** |

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது அழகியபாண்டிபுரம் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். 2 வது எதிரி தற்போது இறந்துவிட்டார். கடந்த 9.1.1994 ஆம் தேதி அழகியபாண்டிபுரம் பிரிவு அழகியபாண்டிபுரம் பீட்டில் வனவர் திரு.திவாகர் நாயர் மற்றும் வனக்காப்பாளர் திரு.பீர்முகமது ஆகியோர் ஒன்றாக கொத்தலபள்ளம் பகுதியில் கல தணிக்கையில் இருந்தபோது அழகியபாண்டிபுரம் கிராம புல

எண் 885/3எ என்ற நிலத்தில் நாவல் மரங்கள் மற்றும் மலைவேம்பு மரங்களை வெட்டி லாரியில் ஏற்றி கொண்டுசெல்ல முனைந்த குற்றம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்படி குற்றம் நிகழ்த்தப்பட்ட நிலம் தனியார் காடுகள் பாதுகாப்பு சட்டத்திற்கு உட்பட்டதாகும். எனவே இக்குற்றம் தொடர்பாக வனவர் திவாகர் நாயர் அவர்களால் எச் நமுனா தயார் செய்யப்பட்டு, அவராலேயே வனக்குற்ற அறிக்கையும் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் மேல் நடவடிக்கைக்கு மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்.மூ.மு.எம்.1/1591/2022 நாள் 18.8.2023 ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்றும் வனவர் திவாகர் நாயர் அவர்களால் ரிமாண்ட் மெமொவும் தயார் செய்யப்பட்டுள்ளது. 1 வது எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2 வது குற்ற எதிரி இறந்துவிட்டார். அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்ததில் வனக்குற்றம் நடைபெற்றது உண்மை என தெரியவந்ததால் அ படிவம் என்னால் தயார் செய்யப்பட்டு மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் அவர்களிடம் சி படிவம் மூலம் அனுமதி பெற்று அ படிவம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. (**18.8.2023 ஆம் தேதியிட்ட மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை நகல் அ.சா.ஆ.4 ஆகவும், சி படிவம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**